செ.வெ.எண்:324 நாள்:18.05.2018

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வருவாய்த் தீர்வாயக் கணக்கு முடிப்பு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர்/ வருவாய்த் தீர்வாய அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் 82 பயனாளிகளுக்கு ரூ.3.71 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

------

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் 1427 ஆம் பசலி ஆண்டு வருவாயத் தீர்வாயக் கணக்கு முடிப்பு நிகழ்ச்சி இன்று (18.05.2018) தொடங்கியது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர்/ நாங்குநேரி வட்ட வருவாய்த் தீர்வாய அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு களக்காடு குறு வட்டத்தை சேர்ந்த கள்ளிகுளம், கீழகருவேலன்குளம், களக்காடு, வடகரை, பத்மனேரி, பத்தை, வடமலைசமுத்திரம் மற்றும் இடையன்குளம் கிராம பகுதிகளை சேர்ந்த பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களின் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார். மேலும் இப்பகுதி கிராம கணக்கு புத்தகங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து 18 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களையும், 20 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டை (ஸ்மார்ட் கார்டு) களையும், 21 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை வழங்குவதற்கான உத்தரவினையும், 23 பயனாளிகளுக்கு உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகளையும் என மொத்தம் 82 பயனாளிகளுக்கு ரூ.3.71 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.மயில், செல்வி. லட்சுமிபிரியா, வேளாண்மை இணை இயக்குநர் திரு.செந்தில்வேல்முருகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் திரு.சிவக்குமார், நாங்குநேரி வட்டாட்சியர் திரு.வாக்கிஷ், துணை வட்டாட்சியர்கள் திரு.குமார், திரு.பாலசுப்பிரமணி மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.